நாள்.09.07.2025

**அசல் வழக்கு எண். 26/2019**
**பெயர்.கெங்கையம்மாள்**

**க.பெ. அய்யாகண்ணு**

**வா.சா.1– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அசல் வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு 200 குழி தீர்ப்பானது அதில் 100 குழியை முத்துவேல் செட்டியார் ஏமாற்றி எழுதி வாங்கிக்கொண்டார் அதற்காக தாக்கல் செய்துள்ளேன். கருப்பையன் யார் என்றால் என் மகன், 2ம் வாதி. 2ம் வாதியை தவிர வேறு பிள்ளைகள் உண்டா என்றால் உண்டு. வளர்மதி, அமுதா, பழனிவேல். இவர்கள் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். கருப்பையன் எங்கு குடியிருக்கிறார் என்றால் வழக்கு சொத்தில். பழனிவேல் அதன் பக்கத்தில் இருக்கிறார். அமுதா, வளர்மதி வேறு இடத்தில் உள்ளார்கள். என்னுடன் தற்போது யார் வந்துள்ளார் என்றால் பேரன், பழனிவேல் மகன். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு என் பெயரில் பட்டா கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அய்யாகண்ணுவிற்கு நீதிமன்றத்தில் பத்திரம் எழுதிகொடுத்தார்கள் அந்த பத்திரம் என்னிடம் இல்லை என்றால் ஆமாம்.

அந்த பத்திரம் நீதிமன்றத்தில்தான் உள்ளது என்றால் ஆமாம். என் கைக்கு வரவில்லை. நீதிமன்றத்திலிருந்து பத்திரத்தை வாங்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வக்கீல் அப்புறம் வாங்கி கொள்ளலாம் என்றார். எந்த தேதியில் நீதிமன்றம் மூலம் பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. 65 வருடம் ஆகிறது. என்னுடைய குறுக்கு விசாரணையில் முத்துவேல் செட்டியார் 1ம் பிரதிவாதி பல லட்சம் பணம் பெற்றுகொண்டார் என்பதற்கு ரசீது உள்ளதா என்றால் இல்லை. 22.07.2014 ல் நீதிமன்றத்திலிருந்து என் கணவர் கிரைய பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். தேதி சரிதானா என்றால் சரிதான். அப்போது என் கணவர் உயிருடன் இருந்தார். என் கணவர் உயிருடன் இருக்கும் காலத்தில் வழக்கு விவரம் பற்றி அவருக்குதான் தெரியும் எனக்கு தெரியாது என்றால் எனக்கும் தெரியும். 23.07.2014 ல் என் கணவர் 1ம் பிரதிவாதிக்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொடுத்த விவரம் பற்றி தெரியுமா என்றால் அப்படி எழுதி கொடுக்கவில்லை. வழக்கு சொத்தை வாங்குவதற்காக உடையாரிடம்

என் கணவர் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.82,000/-. என் கணவர் கிரைய பத்திரத்திற்கு எவ்வளவு பணம் செலுத்தினார் என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் கட்டினார் என்றால் ஞாபகமில்லை. யாருடைய பத்திர அலுவலகத்திற்கு சென்று பத்திரம் பதிவு செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதியும் என் கணவரும் போனார்கள். அந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் தெரியாது. என் கணவர் உயிருடன் இருந்தவரை யார் யாருக்கு பத்திரம் எழுதி கொடுத்தார், பணம் கொடுத்தார் என்ற எந்த விவரமும் எனக்கு தெரியாது தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

என் ஊரில் நடேசன் செட்டியார் மகன் பழனிவேல், தங்கவேல் செட்டியார் மகன் தர்மலிங்கம், ரெங்கசாமி செட்டியார் மகன் சரவணன் ஆகியோர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். தெரியும். அவர்களுக்கும் எனக்கும் பிரச்சனை ஏதும் உண்டா என்றால் இல்லை. மேற்படி 3 பேருக்கு முன்பாகதான் என் கணவர் கடந்த 23.07.2014 ல் தாவா சொத்தான 200 குழியை 1ம் பிரதிவாதிக்கு கிரைய உடன்படிக்கை எழுதி கொடுத்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி 1ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.12,60,000/- யை எனது கணவர் வாங்கியுள்ளார் என்றால் எந்த பணமும் நாங்கள் வாங்கவில்லை. என் கணவர் 18.11.2015 ல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் 23.06.2016 தேதியிட்ட கிரைய பத்திரத்திலுள்ள கைரேகை என்னுடையது என்றால் ஆமாம். அந்த கிரைய பத்திரம் **பி.வா.சா.ஆ.1**ஆக குறியிடப்படுகிறது. அதிலுள்ள முதல் கைரேகை என்னுடையதுதான். **பி.வா.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது. மற்றும் 2வது கைரேகை என் மகன் கருப்பையன் கைரேகை **பி.வா.சா.ஆ.3** ஆக குறியிடப்படுகிறது. மற்ற இரண்டு கையெழுத்துகள் எனது மகன் பழனிவேல் மற்றும் மகள் அமுதா உடையது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.1 ல் உள்ள புகைப்படம் என்னுடையதுதான் என்றால் ஆமாம். என்னை ஏமாற்றி வாங்கிகொண்டார்கள். பத்திர அலுவலகத்தில் ஏமாற்றி வாங்கி கொண்டார்களா என்றால் ஆமாம். பத்திரத்தில் என்னுடைய ஆதார் கார்டு, என் மகனின் குடும்ப அட்டை, என் கணவரின் வாரிசு சான்றிதழ் அனைத்தும் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களை நான் கொடுத்தேனா என்றால் அவர் கேட்டார்

நான் கொடுத்தேன். விவரம் தெரியாமல் கொடுத்தேன். மேற்படி பத்திரம் எழுதிய தேதியில் தாவா புல எண்ணில் கண்ட சொத்து என் கணவர் அய்யாகண்ணு பெயரில்தான் இருந்ததா என்றால் ஆமாம். என் பெயரில் எழுதி தருவதாக முத்துவேல் சொன்னாரா என்றால் ஆமாம். என்ன சொன்னார் என்றால் நாங்கள் அனைவரும் வந்து நீதிமன்றத்தில் எழுதி கொடுத்தால்தான் உடையார் பெயரிலிருந்து எங்கள் பெயருக்கு வரும் என்று சொல்லி அழைத்து சென்றார். எங்கு அழைத்து சென்றார் என்றால் திருவோணத்தில் பத்திர பதிவு அலுவலகத்திற்கு அழைத்து சென்றார். எனக்கு பத்திரம் வாங்கி கொடுப்பதற்கு வழக்கு நடத்திய வக்கீல் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் வக்கீலை தெரியும். இந்த மாதிரி செட்டியார், 1ம் பிரதிவாதி சொல்கிறார் போலாமா வேண்டாமா என்று வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

பத்திர அலுவலகத்தில் கையெழுத்து வாங்கிய பிறகாவது நான் வழக்கறிஞரிடம் போய் சொன்னேனா என்றால் சொன்னேன். பத்திரம் பதிவு செய்த தேதியிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து சொன்னேன் என்றால் மறுநாளே சொன்னேன். அப்படி சொன்ன பிறகு என்னை ஏமாற்றி கையெழுத்து வாங்கிகொண்டார்கள் என்று நானோ வக்கீல் மூலமாகவோ நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் இல்லை. பத்திரம் ஏமாற்றி பதிவு செய்துகொண்டார்கள் என்று போலிசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மோசடியாக எழுதி வாங்கிய பத்திரம் என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். இந்த வழக்குதானா என்றால் ஆமாம். 22.07.2014 ல் நீதிமன்றத்தில் எழுதி கொடுத்த சொத்தைதான் என் கணவர் கடந்த 23.07.2014 ல் 1ம் பிரதிவாதிக்கு ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றால் இல்லை. அதன் அடிப்படையில்தான் என் கணவர் இறந்ததற்கு பிறகு பாதி சொத்திற்கு நான் கிரையம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் எங்களை ஏமாற்றி படிக்காதவர்கள் என்பதால் திருவோணத்திற்கு அழைத்து சென்று படித்து காட்டாமல் எழுதி வாங்கி கொண்டு 7 மணிக்கு பதிவு செய்தபிறகு விட்டார்கள். 200 குழிக்கு ஒப்பந்தம் போட்டு கொடுத்துவிட்டு 100 குழிக்கு மட்டும் கிரையம் எழுதி கொடுத்துவிட்டு ரூ.6,31,000/- யை திருப்பி தருவதாகவும் பாதி சொத்து எங்களுக்கு தேவை என்றும் ஒரு ஒப்பந்தம் எழுதி கொடுத்தோம் என்றால் இல்லை.

வா.சா.ஆ.8 வாட்டாத்திக்கோட்டை காவல்நிலையத்தில் என் மகன் பழனிவேல் சென்று புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த

புகாரை யார் எழுதி தட்டச்சு செய்து கொடுத்தது என்றால் ஞாபகமில்லை. அந்த புகாருக்கு முன்பு வேறு புகார் கொடுக்கவில்லை இதுதான் முதல் புகார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 ல் 1ம் பிரதிவாதி மோசடியாக பத்திரம் எழுதிக்கொண்டார் அவர் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்திலும் வழக்கிலும் 1ம் பிரதிவாதி என்னிடமிருந்து ரூ.5,00,000/- யை வாங்கி கொண்டு ஏமாற்றிவிட்டார் என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் எழுதி கொடுக்கவில்லை. 200 குழி நிலத்தில் 2 வீடுகள் உள்ளது என்றால் இல்லை 4 வீடுகள் உள்ளது. என் கணவருக்கு நீதிமன்றத்தில் எழுதிகொடுத்தபோது 4 வீடு இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் 4 வீடு இல்லை 2 வீடுதான் இருந்தது. அந்த 2 வீடு மேற்கில் ஒன்று, கிழக்கில் ஒன்று என்றால் ஆமாம். மேற்கில் உள்ள வீடும் 100 குழியும் என் அனுபவத்தில் உள்ளது என்றால் 200 குழியும் என் அனுபவத்தில்தான் உள்ளது. மோசடியாக எழுதி கொடுத்ததாக சொல்லும் பத்திரத்திலும் கிழக்கே உள்ள 100 குழியும் அதிலுள்ள வீடும் உள்ளது என்றால் ஆமாம். 200 குழியை தொடர்ந்தார்போல் உள்ள சொத்து உடையாருக்கு உரியது என்றால் சரிதான். அதனை 1ம் பிரதிவாதி வாங்கிவிட்டார். உடையாரிடம் வாங்கிய சொத்தை பொறுத்து எனக்கு பிரச்சனை இல்லை என்றால் உடையார் சொத்தையும் நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். அவ்வாறு அனுபவம் செய்வதற்கு உடையார் எதுவும் எனக்கு குத்தகை கொடுக்கவில்லை என்றால் வாங்கியபிறகு உடையார் அங்கு வரவேயில்லை.

உடையாரிடமிருந்து 1ம் பிரதிவாதி 32 ஏர்ஸ் கிரையம் வாங்கி அவர் அனுபவித்து வருகிறார் என்றால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். ஆனால் 1ம் பிரதிவாதி வாங்கியதாக ஊரில் பேசிக்கொள்கிறார்கள். நான் குடியிருக்கும் வீட்டிற்கு கரெண்ட் இல்லை என்றால் கரெண்ட் உள்ளது. கரெண்ட் பில்லை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். கரெண்ட் இருப்பது மேல்புறம் உள்ள வீட்டில் என்றால் ஆமாம். அந்த கரெண்ட் கனெக்சனை 1ம் பிரதிவாதி ஆட்களை வைத்துஅறுத்து போட்டுவிட்டார் என்று சொல்வது பொய் என்றால் ஆமாம். காவல்நிலையத்தில் மனு கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தஞ்சாவூர் SP, ஒரத்தநாடு DSP யிடம் மனு கொடுக்கவில்லை என்றால் கொடுத்தேன். அவர்கள் பார்வையிட்டார்கள்.

இருந்த இடத்தில் வீடு கட்ட சொன்னார்கள் கட்டினேன். அவர்கள் வந்து பார்த்துவிட்டு நான் சொல்வது பொய் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பார்த்துவிட்டு வீடு கட்டிக்கொள்ள சொன்னார்கள்.நான் கட்டிகொண்டேன். மேற்கில் உள்ள வீட்டையா என்றால் இரண்டு வீட்டையுமே கட்ட சொன்னார்கள். பத்திரப்படி பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் மாறிவிட்டது என்றால் அதைபோய் மாற்றிவிட்டோம்.

தாசில்தாரிடம் சென்று மோசடியான பட்டா என்று மனு கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த பத்திரத்தில் கண்ட சொத்திற்கு நாளது தேதிவரை 1ம் பிரதிவாதிதான் வரி செலுத்துகிறார் என்றால் இல்லை நான் தான் செலுத்துகிறேன். அந்த வரி ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் வக்கீலிடம் கேட்டால்தான் தெரியும். என் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் செய்துள்ள வரி ரசீதுகள் எந்தெந்த வீட்டிற்கு என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என் பெயரில் ஒரு வீடு உள்ளதா என்றால் ஆமாம். அந்த வீடு தான் நீதிமன்றத்தில் பத்திரம் எழுதிகொடுத்த வீடு என்றால் சரிதான். கருப்பையன் பெயரில் உள்ளது வேறு வீடு என்றால் ஆமாம். நான் இருக்கும் வீடும் கருப்பையன் இருக்கும் வீடும் வேறு வேறு தெருவில் உள்ளதா என்றால் இல்லை பக்கத்தில்தான் உள்ளது.பழனிவேல் பெயரில் உள்ள வீடு வேறு என்றால் சரிதான். பழனிவேல் இருக்கிறாரா என்றால் ஆமாம். பழனிவேல் மகன் சக்திவேல் பெயரில் உள்ள வீடு வேறு வீடு என்றால் ஆமாம். தனியாக வாங்கி தனியாக இருக்கிறார். நான் குடியிருக்கும் வீட்டின் பஞ்சாயத்து வார்டு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த வரி ரசீதில் 1ம் வார்டு என்று உள்ளது என்றால் ஆமாம். ஆனால் 2வது வார்டு என்று சொல்கிறார்கள்.

இந்த வழக்கு 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வேறு பரிகாரம் கேட்கவில்லை என்றால் ஆமாம். நான் முழு கிரைய தொகையை வாங்கிகொண்டு முழு விருப்பத்தின் பேரில் 1ம் பிரதிவாதிக்கு பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான் மீதி தொகையான ரூ.6,31,000/- யை திருப்பி கொடுத்துவிடுவதாக முச்சலிக்கா எழுதி கொடுத்துள்ளேன் என்றாலும் அதனை மோசடி செய்ய பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தில் கண்டுள்ள

சொத்தை நாளது தேதிவரை 1ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் நான் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.